## NEWSPAPER CLIPPINGS

| | | | |
|---|---|---|---|
| MEDIA | TAMIL NESAN | DATE | 28 OCT 2013 (MON) |
| PAGE / SECTION | 7 / LOCAL NEWS | READERSHIP | 120,000 |

# பெட்டாலிங் ஜெயா விவேகாநந்தா தமிழ்ப்பள்ளியில் கிளினிக் அமைக்கப்படும்

## பி.ஜே. ரோட்டரி கிளப் உறுதி



எச்.எஸ்.தரன் மற்றும் பி.ஜே.ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் மாணவர்களுக்கு பள்ளி உபகரணப்பொருட்களை வழங்குகின்றனர்.

பெட்டாலிங் ஜெயா, அக். 28- (செய்தி: ந.சத்தியராஜா)

பெட்டாலிங் ஜெயாவிலுள்ள விவேகாநந்தா தமிழ்ப் பள்ளியின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டு 75,000 வெள்ளி செலவில் கிளினிக் ஒன்றை அமைக்க பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப் உறுதியளித்தது. இதற்கான வேலைகள் அடுத்த வாரத்திற்குள் தொடங்கப்பட்டு மூன்று மாதத்திற்குள் நிறைவடையும் என அதன் தலைவர் எச்.எஸ்.தரன் கூறினார்.

பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப்பின் ஏற்பாட்டில் அப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு பள்ளி உபகரணப்பொருட்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு வருகை புரிந்த அவர் தமதுரையில் மேற்கண்டவாறு கூறினார். தனது தலைமையிலான ரோட்டரி கிளப் எல்லா சமுகத்தினருக்கும் எவ்வித பேதமின்றி சேவைகளை வழங்கி வருகின்றது. இம்முறை தமிழ்ப்பள்ளி மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பள்ளியில் 75,000 வெள்ளி செலவில் கிளினிக் ஒன்றை அமைத்துத் தரவிருக்கின்றது. பள்ளி மாணவர்கள் சுகாதாரத்தோடு நலமாக இருப்பதை இந்த கிளினிக் உறுதி செய்யும்.

மேலும், பள்ளி நேரத்தில் ஆசிரியர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு தனியறை வேண்டும் என தம்மிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க தனியறையும் கூடுதலான கழிவறைகளும் அமைத்துத்தரப்படும் என அவர் தெரிவித்தார். இதனிடையே, இந்நிகழ்வில் உரையாற்றிய பெட்டாலிங் ஜெயா விவேகாநந்தா தமிழ்ப்பள்ளியின் தலைமையாசிரியர் பாலமோகன், தமது பள்ளிக்கு பல அமைப்புகள் உதவிகள் வழங்கினாலும் பி.ஜே.ரோட்டரி கிளப் பல வகைகளில் தானாக முன் வந்து உதவுவதாகத் தெரிவித்தார். இனப் பாகுபாடின்றி, ரோட்டரி கிளப் மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டுகுரியது. அதன் சேவை மேன்மேலும் பெருக வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.




எச்.எஸ்.தரன் மாதிரி காசோலையை பள்ளித்தலைமையாசிரியர் பாலமோகனிடம் வழங்குகிறார்.



உபகரணப் பொருட்கள் பெற்ற மாணவர்களுடன் எச்.எஸ்.தரன் மற்றும் பி.ஜே. ரோட்டரி கிளப் உறுப்பினர்கள்.

தொடர்ந்து, இந்நிகழ்வில் எச்.எஸ்.தரன் 100 மாணவர்களுக்கு பள்ளி உபகரணப்பொருட்களையும் தீபாவளி அன்பளிப்பாக அங் பாவையும் எடுத்து வழங்கினார். மேலும், நிகழ்வை மெருகூட்ட பள்ளி மாணவர்களின் நடனமும் மேஜிக் ஷோவும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பெட்டாலிங் ஜெயா ரோட்டரி கிளப்பின் முன்னாள் மாவட்ட கவர்னர் டேவிட் ஹோ, முன்னாள் தலைவர் டத்தோ கேவின் யோங், ரோட்டரி கிளப் உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.



கிளினிக் அமைக்கப்படவிருக்கும் இடத்தை எச்.எஸ்.தரன் காட்டுகிறார்.